- உலகில் உள்ள அனைத்து விலங்குகளும் தமது உணவை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தாவரங்களில் இருந்து பெறுகின்றன.
- இதற்குக் காரணம் தாவரங்கள் **தற்போசனிகளாக** இருப்பதாகும் அதாவது தமது உணவை தாவரங்களே தொகுக்கும் (தயாரிக்கும்) ஆற்றல் கொண்டவையாக இருப்பதாகும்.
- ஏனைய விலங்குகள் தமது உணவை வேறு அங்கிகளில் இருந்து பெறுவதால் அவை **பிறபோசனிகள்** எனப்படும்.

**ஒளித்தொகுப்பு :-**

- எளிய அசேதனக் தொடக்குப் பொருட்களில் இருந்து பச்சையம் உள்ள கலங்கள் சூரிய ஒளி முன்னிலையில் சிக்கலான சேதன உணவைத் தொகுக்கும் செயன்முறை **ஒளித்தொகுப்பு** எனப்படும்.
- பச்சைத் தவரங்கள் தமது ஒளித்தொகுப்புச் செயன்முறைக்கு $CO_2$ , $H_2O$ ஆகிய தொடக்கப் பொருட்களைப் பயன்படுத்துகின்றன.
- பச்சைத் தாவரங்களில் நடைபெறும் ஒளித்தொகுப்புச் செயன்முறை பின்வரும் சமன்பாட்டின் மூலம் காட்டப்படும்.

$$6CO_2 + 6H_2O \xrightarrow[\text{பச்சையம்}]{\text{சூரிய ஒளி}} C_6H_{12}O_6 + 6O_6\uparrow$$

- கலங்களில் உள்ள பச்சையத்திலேயே ஒளித் தொகுப்புச் செயன்முறை நடைபெறுகிறது.
- சூரிய ஒளி ஒளித்தொகுப்புச் செயன்முறைக்குத் தேவையான **சத்தியை** வழங்குகிறது.

**ஒளித்தொகுப்பின் முக்கியத்துவம் :-**

- விலங்குகளுக்குத் தேவையான உணவு கிடைக்கும். அதாவது உணவு மூலம் சக்தி கிடைக்கும்.
- பல்வேறு செயற்பாடுகள் மூலம் வெளிவரும் $CO_2$ சூழலில் இருந்து அகற்றப்பட உதவுகிறது.
- விலங்குகள் சுவாசிக்கத்தேவையான ஒட்சிசன் வெளியிடப்படும்.
- உணவுச்சங்கிலியின் ஆரம்ப அங்கியாக அமைவதால் உணவுச்சங்கிலி நிலைத்திருக்க உதவும்.
- ஒளிச்சக்தி இரசாயன சக்தியாக மாற்றப்படுகிறது.

**இலைகளும் ஒளித்தொகுப்பும் :-**

- தாவரங்களில் ஒளித்தொகுப்பிற்குச் சிறப்படைந்த அங்கம் பிரதானமாக இலையாகும்.
- இதற்காக இலைகள் பல சிறப்புக்களைக் கொண்டள்ளன.
- இலைகள் ஒளித்தொகுப்பிற்கு ஒளியைப் பெறவேண்டும், வளிமண்டலத்தில் இருந்து காபனீரொட்சைட்டைப் பெறவேண்டும்.
- இதற்காக இலைகள் பின்வரும் சிறப்புக்களைக் கொண்டுள்ளன :-

1. அகன்ற தட்டையான இலைகள் - பரப்புப்கூட கூடிய சூரிய ஒளி கிடைக்கும்.
2. இலைகள் மெல்லியவை – சூரிய ஒளி ஆழத்திற்கு ஊடுருவும்.
3. இலையின் மேற்றேல் கலங்கள் ஒரு படையில் காணப்படுகின்றன.
4. இலைகள் தண்டில் ஒழுங்கில் அடுக்கப்பட்டிருக்கும் - எல்லா இலையும் ஒளி பெறுவதற்கு.

இதற்காக இலையின் குறுக்கு வெட்டை முப்பரிமாணத் தோற்றத்தில் அவதானிப்போம்.




5. பச்சையவுரு மணிகளைக் கொண்ட வேலிக்காற்படைக் கலவிழையங்கள் நீள அச்சில் அடுக்கப்பட்டிருப்பதால் அதிக பச்சையவுருமணிகள் காணப்படக்கூடியதாக இருக்கும்.
6. அதிகளவிலான இலைவாய்கள் காணப்பவதால் தேவையான $CO_2$ வைப் பெற முடியும்.
7. கடற்பஞ்சிழையம் கலத்திடைவெளிகளைக் கொண்டுள்ளன. இதனால் வாயுப்பரிமாற்றம் நடைபெற வழிவகுக்கும்.
8. இலைகளில் நடுநரம்பும் (காழ்,உரியம் ) அதனுடன் தொடர்புடைய வலையமைப்பில் பல சிறிய நரம்புகளும் காணப்படுகின்றன. இதனால் இலைக்கலங்களுக்குத் தேவையான நீர் கிடைக்கும் மேலும் இலையில் உருவாகும் உணவு அகற்றப்படவும் முடியும்.

- இலைகள் ஒளித்தொகுப்புச் செயன்முறையில் முதல் விளைவாக **குளுக்கோசை** உற்பத்தி செய்கின்றன.
- இக்குளுக்கோஸ் பெரும்பாலும் இலைகளில் **மாப்பொருளாக** மாறியிருக்கும்.
- மேலும் தொகுக்கப்படும் உணவு வெவ்வேறு தாவரங்களில் வேர் தண்டு போன்ற பகுதிகளில் வெவ்வேறு சேமிப்புணவுகளாகக் காணப்படும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உதாரணம் :- | உருளைக்கிழங்கு | – | தண்டு | - | மாப்பொருள். |
| | மரவள்ளிக்கிழங்கு | - | வேர் | - | மாப்பொருள். |
| | கரும்பு | - | தண்டு | - | வெல்லம். |

- எனினும் இலைகளில் பெரும்பாலும் மாப்பொருளாகவே காணப்படும்.
- இலைகளில் மாப்பொருள் இருப்பதைக் காட்ட ஒழுங்கமைக்கப்பட்ட பரிசோதனை ஒன்று உள்ளது.
- பொதுவாக மாப்பொருட் சோதனைக்கு **அயடீன் கரைசல்** பயன்படும்.
- தரப்பட்ட பொருளுக்கு அயடீன் கரைசல் சேர்க்கும் போது **கருநீல நிறம்** தோன்றும்.

(அயடினின் பளிங்கின் நிறம் ஊதா ஆகும் , அது பொட்டாசியம் அயடைற்றில் கரைக்கப்பட்டமும் கபிலநிறமாக மாறும்)

**இலைகளில் மாப்பொருட் சோதனை :-**




**இப்பரிசோதணையின் படிமுறைகள் :-**

- இலையை நீரில் அவித்தல் - இலைக்கலங்களைக் கொல்வதற்கு.
- இலையை மதுசாரத்தில் அவித்தல் - இலையில் உள்ள பச்சையத்தை அகற்றல்.
- இலையை நீரில் கழுவுதல் - இலையில் உள்ள மதுசாரத்தைக் கழுவுதல்
- அயடின் கரைசல் சேர்த்தல் - மாப்பொருட் ரோதனைக்காக.

**இப்பரிசோதணையின் அவதானங்கள் :-**

- இலை வெளிரும் மதுசாரம் பச்சையாகும் காரணம் இலையில் உள்ள பச்சையம் அகற்றப்படுவதால்.
- இலை கருநீல நிறமாக மாறும் காரணம் அயடின் சேர்க்கப்பட்டதினால்.
- அயடின் கரைசல் சேர்க்கும் போது மாப்பொருள் மட்டுமே கருநீல நிறமாகும். இதிலிருந்து இலையில் மாப்பொருள் உண்டென அறியலாம்.

**சில உணவுப் பொருட்களுக்கான சோதனைகள் :-**

**புரதச் சோதனை :-**

01) நைத்திரிக்கமிலத்தைப் ($HNO_3$) புரதத்தின் மீது சேர்க்கும் போது புரதம் மஞ்சள் நிறமாக மாறும். இப்பரிசோதனை **சாந்தோபுரதப் பரிசோதைனை** எனப்படும்.
02) **மில்லரின் சோதனைப்** பொருளுடன் வெள்ளை நிறத்தைக் கொடுக்கும் சூடாக்கினால் brick – red ஆக மாறும்.
03) **Biuret Test** இச்சோதனைப் பொருளுடன் சூடாக்கினால் ஊதா நிறமாக மாறும். ( NaOH , $CuSO_4$)
04) **வலிய அயடின்** கரைசலுடன் மஞ்சள் சார்ந்த கபிலநிறமாக மாறும்.

**இலிப்பிட்டுச் சோதனை :-**

- சூடான் III எனும் சோதனைப் பொருளை இலிப்பிட்டுடன் இட்டக் கலக்கும் போது சிவப்பு நிறக்ோளங்கள் பெறப்படும்.
- இது நுணுக்குக் காட்டியின் கீழ் அவதானிக்கப்பட வேண்டும்.

**ஒளித்தொகுப்பிற்குரிய காரணிகளும் மூலப்பொருட்களும் :-**

- ஒளித்தொகுப்பிற்கு நீரும் காபனிரொட்சைட்டம் மூலபபொருட்களாகும் .அதோநேரத்தில் பச்சையமும் சூரிய ஒளியும் தேவைப்படும் முக்கிய காரணிகளாகும்.

**பச்சையம் :-**

- உயர்தாவரங்களில் பச்சையவுருமணிகளில் ஒளித்தொகுப்பு நடைபெறும்.
- இப்பசையவுருமணிகளில் ஒளித்தொகுப்பை நடத்தும் நிறப்பொருட்கள் காணப்படுகின்றன.
- இப்பச்சையவுருமணிகள் தாவரங்களில் இலைகளில் பெருமளவில் காணப்படுகின்றன.
- இலைகளில் காவற்கலங்களில் , இலைநடுவிழையத்தில் பச்சையவுருமணிகள் காணப்படுகின்றன.
- பச்சைவுருமணிகளில் பிரதானமாக உள்ள நிறப்பொருள் பச்சையமாகும் இது குளோரபில் a,b,c,d எனும் 4 வகைகளில் உண்டு.
- இவற்றில் உயர் தாவரங்களில் குளோரபில் a,b எனும் நிறப்பொருள் பிரதானமாக காணப்படும்.
- குளோரபில் சூரிய ஒளியில் உள்ள சிவப்பு , நீல நிற ஒளிகளை அதிகம் உறுஞ்சும். பச்சை நிறத்தை தெறிக்கச் செய்யும்.
- மேலும் பச்சையவுருமணியில் கரோட்டின் , சாந்தோபில் எனும் நிறப்பொருட்களும் உண்டு.
- இவை பொதுவில் மஞ்கள் நிறமுடையவையாகும்.
- இலைகள் முதிர்ச்சியடையும்போது இந்நிறம் வெளிப்படும்.

**ஒளி :-**

- ஒளித்தொகுப்பிற்குத் தேவையான **சச்தியை** வழங்கும் மூலம் **சூரியன்** ஆகும்.
- **சிவப்பு நிற** ஒளியும் நீல நிற ஒளியும் அதிக பங்களிப்புச் செய்கின்றன.
- ஒளியின் அளவு அதிகரிக்கும் போது ஒளித்தொகுப்பும் அதிகரிக்கும் எனினும் **ஒளியை** தொடர்ந்து தொடுப்பதைக் காட்டிலும் **விட்டு விட்டுக்** கொடுத்தல் அதிக ஒளித்தொகுப்பு நடைபெற உதவும்.

**காபனீரொட்சைட்டு நீரும் :-**

- ஒளித்தொகுப்பிற்குரிய மூலப்பொருட்கள் இவையாகும்.
- இவை இரண்டும் அசேதனப் தொடக்குப் பொருட்கள் எனப்படும்.
- இவை எளிய நிலையில் காணப்படும் கூறுகளாகும் , ஒளித்தொகுப்பில் இக்கூறுகள் சிக்கலான கூறுகளாக மாற்றப்படம்.
- காபனீரொட்சைட்டுடன் நீரில் காணப்படும் ஐதரசன் சேருவதால் குளுக்கோஸ் தயாரிக்கப்படுகின்றது.
- இந்நிலையில் நீரில் இருந்து ஒட்சிசன் வெளியேறும்.
- ஒட்சிசன் வெளியேறி ஐதரசன் சேர்வதால் ஒளித்தொகுப்புச் செயன்முறை **தாழ்த்தல் தாக்கம்** எனப்படும்.

**ஒளித்தொகுப்பிற்குரிய காரணிகள் அவசியம் எனக் காட்டல் :-**

- ஒளித்தொகுப்பிற்குத் தேவையான காரணிகளைக் காட்டும் பரிசோதனையில் ஒளித்தொகுப்பு நடைபெற்றது என்னது இலையில் மாப்பொருட் சோதனை மூலம் உறுதிப்படுத்தப்படும்.
- ஒளித்தொகுப்பிற்குரிய காரணிகள் அவசியம் எனக்காட்டும் எல்லாப் பரிசோதனைக்கும் பின்வரும் ஆரம்பச் செயன்முறைகள் பினவருமாறு அமையும்.

1. சாடித்தாவரம் தெரிவு செய்யப்படும். - இலகுவில் அசைக்ககமுடியும்
2. அது 48 மணி நேரம் வரை இருளில் வைக்கப்படும். - இலைகளில் உள்ள மாப்பொருளை அற்ற.
3. அதன் ஒரு இலையைப் பிடுங்கி மாப்பொருட் சோதனை செய்தல் - மாப்பொருள் இல்லையென உறுதிப்படுத்தல்.

- மேலே குறிப்பிட்ட செயன்முறைகளின் பின்னர் ஒவ்வொரு காரணிகளுக்கும் தனத்தனியான முறையில் பரிசோதனை செய்யப்படும்.

**01) ஒளி அவசியம் எனக் காட்டும் பரிசோதனை :-**

**அமைப்புப்படம்**




4. ஒரு இலை படத்தில் உள்ளவாறு கறுப்புக் கடதாசியால் சுற்றப்பட்ட பின் தாவரம் 6 மணிநேரத்திற்கு ஒளியில் வைக்கப்படும்.
5. பின்னர் அவ்விலை மாப்பொருட்சோதனைக்கு உட்படுத்தப்படும்.

**அவதானம்**

- ஆரம்பத்தில் மாப்பொருட்சோனைக்கு விடை இல்லை.
- பின்னர் கறுப்புக்கடதாசியால் சுற்றப்பட்ட பகுதியில் கருநீலநிறம் தோன்றவில்லை ஏனைய பகுதிகளில் கருநிலநிறம் தொன்றுவதைக் காணலாம்.

**முடிவு**

- ஒளிபட்ட இடத்தில் நிறமாற்றம் ஏற்பட்டதில் இருந்து ஒளிகிடைத்தால் மாப்பொருள் தொகுக்கப்படும் என முடிவு செய்யலாம் , அதாவது ஒளித்தொகுப்பு நடைபெறும் என முடிவு செய்யலாம்.

**02) $CO_2$ அவசியம் எனக் காட்டும் பரிசோதனை :-**

**அமைப்புப் படம்**




4. இருளில் வைக்கப்பட்ட தாவரம் இரண்டாம் படத்தில் உள்ளவாறு அமைப்பை ஒழுங்கு செய்து ஒளியில் வைக்கப்படும்.
5. பின்னர் அவ்விலை மாப்பொருட்சோதனைக்கு உட்படுத்தப்படும்.

**அவதானம்**

- ஆரம்பத்தில் மாப்பொருட்சோனைக்கு விடை இல்லை.
- பின்னர் நீர் கொண்ட இலை மாப்பொருட்சோதனைக்கு விடை தரும் அதில் கருநீலநிறம் தோன்றும்.மற்றைய இலையில் கருநிலநிறம் தோன்றாது.

**முடிவு**

- KOH , $CO_2$ வை உறுஞ்கும் ஆற்றல் உடையது.ஸிபட்ட இடத்தில் நிறமாற்றம் ஏற்பட்டதில் இருந்து ஒளிகிடைத்தால் மாப்பொருள் தொகுக்கப்படும் என முடிவு செய்யலாம் , அதாவது ஒளித்தொகுப்பு நடைபெறும் என முடிவு செய்யலாம்.

**03) பச்சையம் அவசியம் எனக் காட்டும் பரிசோதனை :-**

**அமைப்புப் படம்**



கொப்பியில் வரையப்பட்ட இலையென்றின் படம்.

- இருளில் வைத்த மாப்பொருள் இல்லை என உறுதிப்படுத்தப்பட்ட சாடித்தவரத்தின் இலையென்றின் புறவுருவை வரைந்து கொள்ளல்.
- பின்னர் தாவரத்தை 6 மணி. வரை ஒளியில் வைத்து பின்னர் குறிப்பிட்ட இலையில் மாப்பொருள் சோதனை செய்தல்.

**அவதானம்**

- ஆரம்பத்தில் மாப்பொருட்சோனைக்கு விடை இல்லை.
- பின்னர் பச்சை நிறமாக இருந்த பகுதியில் கருநிலநிறம் தோன்றியது.

**முடிவு**

- இதிலிருந்து பச்சை நிறப்பகுதியிலேயே மாபொருள் உருவாகின்றது அதாவது ஒளித்தொகுப்பு நடைபெறுகிறது என முடிவு செய்யலாம்.
- இது ஒளித்தொகுப்பிற்கு பச்சையம் அவசியம் என்பதைக் காட்டுகிறது.

**04) நீர் அவசியம் எனக் காட்டும் பரிசோதனை :-**

- நீர் அவசியம் எனக் காட்டும் பரிசோதனையை ஆய்வு கூடங்களில் செய்ய முடியாது.
- காரணம் , நீரைக்கட்டுப்பாட்டப் பரிசோதனையாக தயார் செய்ய முடியாது என்பதால்ஆகும். ஏனெனில் அவ்வாறு செய்தால் தாவரம் இறந்து விடும்.
- எனவே இதைப் பரிசோதனை மூலம் காட்ட பின்வரும் முறை கையாளப்படும்.
- $C^{18}O_2$ , $H_2{}^{18}O$ என்பன தனித்தனியே இலைக்கலங்களுக்க வழங்கப்பட்ட அவதானிக்கப்பட்ட போது $C^{18}O_2$ கொடுக்கப்பட்ட அமைப்பில் இருந்த சாதாரண $O_2$ வெளிவந்தது. ஆனால் $H_2{}^{18}O$ கொடுக்கப்பட்ட அமைப்பில் இருந்து $^{18}O_2$ வெளிவந்தது.
- இதிலிருந்து நீரும் ஒளித்தொகுப்பிற்குப் பயன்படுகின்றது எனக் காட்ட முடியும்.

**ஒளித் தொகுப்பில் ஒட்சிசன் வெளிவருதைக் காட்டல் :-**

- ஒளித்தொகுப்பின் போது பக்கவிளைவாக ஒட்சிசன் வெளிவரும்.
- இவ்வொட்சிசன் நீரின் இருந்து வெளிவரும்.
- இப்பரிசோதனைக்கு நீர்த் தாவரம் தெரிவு செய்யப்படும்.
- காரணம் ஒட்சிசனைச் சேகரித்தல் இலகுவாகும்.

**அமைப்புப் படம்**




- மேற்படி அமைப்பை ஒழுங்கு செய்து நன்கு சூரிய ஒளி கிடைக்கம்படி வைத்தல்.
- சிறிது சிறிதாக் வளிக்குமிழ் உருவாகி சோதனைக் குழாயின் மேல் செல்லும் சோதனைக்குழாய் பெருமளவு வளியால் நிறைந்த பின் கவனமாக மேலே எடுத்த அதனுள் தணற்குச்சி ஒன்றை கொண்ட சென்று அவதானிக்க.

**அவதானம்**

- தணற்குச்சி தீப்பற்றி எரிவதைக் காணலாம்.

**முடிவு**

- தணற்குச்சியை எரிய வைக்கும் வாயு ஒட்சிசனாகும். எனவே ஒளித்தொகுப்பில் ஒட்சிசன் வெளிவருகிறது என முடிவு செய்யலாம்.

**ஒளித் தொகுப்பு வீதத்தை அளவிடல் :-**

- ஒளித்தொகுப்ப வீதம் குறித்த நேரத்தில் வெளிவரும் ஒட்சிசனின் கனவளவைக் கொண்ட அறியப்படும்.
- $CO_2$ பயன்படும் வீதத்தைக் கொண்டும் ஒளித்தொகப்பு வீதத்தை அறியலாம்.

**ஒளித் தொகுப்பில் தொகுக்கப்படும் குளுக்கோசில் ஏற்படும் மாற்றம் :-**

- குளுக்கோசின் ஒரு பகுதி இலைகளுக்குத் தேவையான சக்தி உற்பத்திக்குப் பயன்படும்.
- குளுக்கோசின் மேலும் ஒரு பகுதி ஒளித்தொகுப்பு நடைபெறாத தாவரப் பகுதிகளின் சக்தி உற்பத்திக்குப் பயன்படும்.
- மாப்பொருளாக மாற்றப்பட்டு இலைகளில் சேமிக்கப்படும்.
- தாவரத்தின் பல்வேறு பகுதிகளிலும் தேவைப்படும் புரதம், செலுலோசு, இலிப்பிட்டு ஆகியன உற்பத்திக்குப்பயன்படும்.
- மேலும் புரதம் , மாப்பொருள், இலிப்பிட்டு , ஆகியனவாக மாற்றப்பட்டு வித்துக்கள் , பழங்கள், கிழங்குகள், நிலக்கீழத் தண்டுகள் ஆகியவற்றில் சேமிக்கப்படும்.

Note :-

- சிலவகைத் தாவரங்களில் குளுக்கோஸ் மாப்பொருளாக மாற்றப்படுவதில்லை. உதாரணம் வெங்காயக் குடும்பத் தாவரங்களில்.
- கரும்பு பீட்றூட் போன்றவற்றில் சுக்குரோசாக உணவு சேமிக்கப்படுகிறது. இதனால் இவை சீனி தயாரிப்பில் பயன்படுகிறது.
- மேலும் சில வகைத் தாவரங்களில் கொழுப்பாக சேமிக்கப்படும். உதாரணம் - நிலக்கடலை , தேங்காய்.